ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

# திருக்கோட்டியூர் நம்பி – வருஷதிருட்சத்திரம் - வைகாசி - ரோகிணி



ஸ்ரீசௌம்யநாராயணப்பெருமாள்



திருக்கோட்டியூர் நம்பி – புகைப்படங்கள் உதவி - ஸ்ரீ TKR வேம்பு ஸ்வாமி

## தனியன்

வைஸாக ரோஹிண்யுதிதம் கோஷ்டீபூர்ணம் ஸமாஸ்ரயே /
சரமஸ்லோக தாத்பர்யம் யதிராஜாய யோSவதத் //

ஸ்ரீவல்லப பதாம்போஜ தீபகத்யம்ருத ஸாகரம் /
ஸ்ரீமத் கோஷ்டீபுரீ பூர்ணம் தேஸிகேந்தரம் பஜாமஹே //

## வாழித்திருநாமம்

மன்னியசீராளவந்தார் மலர்ப்பதத்தோன் வாழியே
வைகாசி ரோகிணி நாள் வந்துதித்தோன் வாழியே
இன்னிளவஞ்சிக்கனிதுரைத்தான் வாழியே
எம்பெருமானாரெனும் பேரியம்புமவன் வாழியே
தென்னணியாம் காசிபகோத்திரத்துதித்தோன் வாழியே
திருக்குருகைப்பிரான்னெனும்பேர் திகழவந்தோன் வாழியே
முன்னரும் பெரும்பூதூர் முனிக்குரைத்தோன் வாழியே
மொழிந்த திருக்கோட்டிநம்பி மூதுலகில் வாழியே.

காசிபன் தன்கோத்திரத்தைக் கருதிவந்தோன் வாழியே
கலையனைத்தால் முன்னவர்க்குக் கதியளித்தோன் வாழியே
மாசறமெய்ப்பொருளெதிக்குவழங்குமவன் வாழியே
வையகமுன் தரிசனத்தால் வாழுமென்றான் வாழியே
ஏசறவேயுகந்தெதியை எடுத்தணைத்தான் வாழியே
எம்பெருமாரெனும் பேரியம்புமவன் வாழியே
தேசபுகழ்ச்செல்வன் மொழிதேர்ந்துரைப்பபோன் வாழியே
திருக்கோட்டிபூர்நம்பி சகதலத்தில் வாழியே.

ஈரேழுமூன்றொன்றில் இதமுரைத்தான் வாழியே
ஏற்றமாமளவந்தாரிணையடியோன் வாழியே
ஈரெழுவருக்கும் பதம் ஈயுமவன் வாழியே
எம்பெருமானாரெனும் பேரியம்புமவன் வாழியே
நாலேழில் நாலாநாள் நாடிவந்தான் வாழியே
நம்மதுரகவிநிலையை நண்ணினான் வாழியே
நாலேழுநாலெழுத்தை நன்குரைத்தான் வாழியே
நங்கள் திருக்கோட்டிநம்பி நற்பதங்கள் வாழியே.

அல்பகலும் ஆளவந்தார் அடிநினைவோன் வாழியே
அனவரதம் தெற்காழ்வார்க்காட் செய்வோன் வாழியே
வெல்பொருள் வெளியிட, எதியை வெறுத்துகந்தான் வாழியே
மேதினியோருய்வரென்று மெச்சினான் வாழியே
உள்மந்திரமெதிரராசர்க்கொளித்துரைத்தான் வாழியே
உந்து மதத்தெதியை உகந்தணைத்தான் வாழியே
செவ்வநம்பிகுலம் தழைக்கச் செகத்துதித்தான் வாழியே
திருக்கோட்டிபூர் நம்பி சகதலத்தில் வாழியே.

**அவதாரஸ்தலம் - திருக்கோஷ்டியூர்**
**திருநாமங்கள் - திருக்கோஷ்டியூர் நம்பி, கோஷ்டிபூர்ணர், கோஷ்டீபுரீஸர், குருகேசர்**
**திருக்குமாரர் - தெற்காழ்வான்**
**திருக்குமாரத்தி – தேவகிப்பிராட்டியார்**
**ஆசார்யர் - ஸ்ரீஆளவந்தார்**
**சிஷ்யர் - ஸ்ரீபாஷ்யகாரர்**

## திருக்கோட்டியூர் நம்பி அருளியுள்ள பெரியதிருமொழி தனியன்

கலியாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம் /
யஸ்ய கோபி: ப்ரகாஸாபி: ராவித்யம் நிஹதம் தம: //

திருக்கோட்டியூர் என்கிற திவ்யதேசம் நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் முதலில் பெரியாழ்வாரால் மங்களாஸாஸனம் செய்யபட்ட திவ்யதேசம் ஆகும். (வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் - பெரியாழ்வார் திருமொழி முதல் பாசுரம்). திருக்கோட்டியூர் நம்பி நித்ய சூரிகளில் ஒருவரான `புண்டரீகர்' அம்சமாக வைகாசி மாதம் ரோகிணி நசஷத்திரத்தில் பெரியாழ்வாரின் அபிமாநத்துக்குரியவரான செல்வநம்பி வம்சத்தில் காச்யப கோத்ரத்தில் அவதரித்தார். இவருடைய திருநாமம் - குருகேசர். இவருடன் அநுவ்ருத்தி ப்ரஸந்நரான ஆசார்யர்களின் பரம்பரை முடிந்தது. (அதாவது ஓரான் வழியாக விஷயத்தை தம் சிஷ்யர்களுக்கு சொல்லிக் கொடுத்தல்). இராமானுஜர் முதல் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய பரம்பரை துவங்கியது. (அதாவது இந்த ஸம்பரதாயத்தில் ஆசையுடையவர்கள் யாராகயிருந்தாலும் விஷயத்தை தம் ஆசாரியனிடத்தில் கேட்டு தெரிந்து கொள்ளுதல்). இவர் தன் மகன் தெற்காழ்வான் மற்றும் மகள் தேவகிப்பிராட்டியை எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயிக்கச் செய்தார்.

## திருக்கோட்டியூர் நம்பியும் உடையவரும்

திருமந்திரத்தின் அர்த்த விசேஷங்களை கேட்டு தெரிந்து கொள்வதற்காக உடையவர் திருக்கோஷ்டியூர் நம்பிகளிடம் சென்றார். அவர் இப்பொழுது அதை சொல்ல முடியாது என்று இவரை திருப்பி ஸ்ரீரங்கத்திற்க்கே போகும்படி சொல்லி விட்டார். இவ்வாறு 17 தடவை திருக்கோஷ்டியூர் சென்று வந்தார். 18ஆம் தடவை செல்லும் போது, நம்பி இவருக்கு திருமந்திரத்தின் அர்த்த விசேஷங்களை எல்லாம் சொன்ன பிறகு, நம்பி இவரிடம் இந்த ரகசியத்தை தகுதியில்லாத எவரிடமும் சொல்லக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். மறுநாள் காலையில் உடையவர் திருக்கோஷ்டியூர் சன்னதியில் குழுமியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் திருமந்திரத்தின் அர்த்தத்தை சொன்னார். இதனைக்கேள்வியுற்ற நம்பி உடையவரிடம் `என்னிடம் கொடுத்த உறுதி மொழியை ஏன் மீறினீர்' என்று கேள்வி கேட்டார். இதற்கு உடையவர் `நான் சொல்லியதைக் கேட்டு ஆயிரம் பேரின் ஆத்மா பரமபதம் அடையட்டும், நான் மட்டும் ஆசாரியரின் வார்த்தையை மீறியதற்க்காக நரகத்திற்கு போனால் பரவாயில்லை என்று நினைத்து இவ்வாறு சொன்னேன்' என்று கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்ட நம்பிகள், இந்த தியாகச்செயலைப் பாராட்டி உமக்கு `எம்பெருமானார்' என்று பெயர் இனி விளங்கட்டும் என்று ஆசீர்வாதம் செய்தார். இவர் ஏற்படுத்திய தரிசனமே எம்பெருமானார் தரிசனம் என்று இன்றளவும் விளங்குகிறது.

## ஆளவந்தாரும் திருக்கோட்டியூர் நம்பியும்

ஆளவந்தாரின் முக்ய சிஷ்யர்களில் பெரிய நம்பிக்கு அடுத்தபடியாக திருக்கோட்டியூர் நம்பி மிகநெருக்கமாக இருந்தார். ஆளவந்தாரின் கடைசி காலத்தில் அவர் நோய்வாய் பட்டிருந்த பொழுது பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும் அவருடனே பரமபதம் செல்ல சித்தமானார்கள். நம்பெருமாள் அருளினாலும், திருவரங்கப்பெருமாள் அரையர் வேண்டுகோளினாலும், இருவரும் தங்கள்முடிவை மாற்றிக்கொண்டு பூர்வாசார்கள் கைங்கர்யத்தை தொடர இசைந்தார்கள். பின்னர் ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பியை அழைத்து இராமானுஜருக்கு சரமஸ்லோகத்தின் ஆழ்பொருள்களை விளக்கி உபதேசிக்கும்படி கேட்டுக் கொண்டார். மேலும்தான் தினந்தோறும் மிகவும் ஆராதித்து வந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை இவரிடம் கொடுத்து `இம்மூர்த்திதான் அந்த இளையாழ்வார் காணீர்' என்று சொன்னார்.

## திருக்கோட்டியூர் நம்பிகளும் திருக்கச்சி நம்பிகளும்

`வீசினதற்கு பேசினது சரியாயிற்று' என்று பெருமாள் சொல்லிவிட்டதால் திருக்கச்சி நம்பிகள் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் கைங்கர்யம் செய்வது என்று முடிவெடுத்தார். அவரிடம் நேரிலே சென்று கைங்கர்யம் கேட்டால் வேலை தரமாட்டார் என்று கருதி மாடுமேய்ப்பவனாகவும், வண்டிக்காரனாகவும் வேஷமிட்டுக்கொண்டு பலமாதங்கள் அவரிடம் கைங்கர்யம் செய்தார். ஒருநாள் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த பொழுது பெரிய மழை பெய்தது. மாடுகள் நனையாமல் இருக்க தன்வஸ்த்ரங்களை மாடுகள் மேல்போட்டு அவைகள் நனையாமல் பார்த்துக் கொண்டார். வண்டிக்காரனைத் தேடிவந்த திருக்கோட்டியூர் நம்பி வேடம் கலைந்திருந்த திருக்கச்சி நம்பியை அடையாளம் கண்டு கொண்டு `நீர் இப்படி செய்யலாமோ' என்று கேட்க திருக்கச்சி நம்பி வெட்கமடைந்து, நடந்த விஷயத்தைச் சொன்னார். திருக்கோட்டியூர் நம்பி அவரை ஆசீர்வதித்து காஞ்சீபுரத்திற்கு அனுப்பி வைத்தார்.

## திருக்கோட்டியூர் நம்பியும் கூரத்தாழ்வானும்

சிலகாலம் கழித்து எம்பெருமானார் திருக்கோஷ்டியூர் சென்று நம்பி திருமாளிகையில் தங்கி அவரிடம் சரமஸ்லோக ரஹஸ்யார்த்தங்களை தெரிந்து கொண்டார். கூரத்தாழ்வானிடத்தில் மட்டும் இந்த ரஹஸ்யார்த்தங்களை தெரிவிக்க அனுமதித்தார். `ஆனால் கூரத்தாழ்வான் உம்மிடத்தில் ஒருவருடம் கைங்கர்யம் செய்யவேண்டும். அதில் திருப்தி ஏற்பட்டால் மட்டுமே அவருக்கு ரஹஸ்யார்த்தங்களை தெருவிக்கவேண்டுமென்று' நிபந்தனையிட்டார்.

## திருக்கோட்டியூர் நம்பியும் முதலியாண்டானும்

முதலியாண்டானும் சரமஸ்லோக ரஹஸ்யார்த்தங்களை தெரிந்து கொள்ள விரும்பி திருக்கோட்டியூர் நம்பியிடம் நேரில் சென்று விண்ணப்பித்தார். நம்பிகள் அவரை ஆறுமாத காலம் காத்திருக்கச் செய்து அவருடைய ஈடுபாட்டை பரிசோதித்தார். வித்யா கர்வம், தநகர்வம், குலகர்வம் ஆகிய 3 குணங்களையும் அறுத்து ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய 3 குணங்களையும் வளர்த்துக்கொண்டு எம்பெருமானாரிடம் ரஹஸ்யார்த்தங்களை கேட்டுக் கொள்ளும் என்று சொல்லி திருப்பி அனுப்பி வைத்துவிட்டார்.

## எம்பெருமானார்க்கு திருமாலையாண்டானை அறிமுகப்படுத்துதால்

ஒருசமயம் திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கம் சென்றிருந்த பொழுது திருமாலையாண்டான் என்கிற ஆசார்யரை அழைத்துக்கொண்டு எம்பெருமானார் மடத்துக்கு எழுந்தருளினார். எம்பெருமானார் இருவருக்கும் தெண்டன் சமர்பித்து நின்றார். நம்பி திருமாலையாண்டானிடம் எம்பெருமானாருக்கு திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்களை கூறுமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி திருமாலையாண்டானும் எம்பெருமானாருக்கு திருவாய்மொழியின் அர்த்தங்களை கூறிவந்தார். ஒருசமயம் `அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து அறியாமாமாயத்து (2ஆம் பத்து 3ஆம் திருவாய்மொழி 3ஆம் பாசுரம்) என்கிற பாசுரத்திற்கு திருமாலையாண்டான் ஒரு அர்த்தம் சொல்ல எம்பெருமானார் அது சரியில்லை என்று தெரிவித்து வேறு விதமாக அர்த்தம் சொல்லி அது தான் பொருத்தமானது என்றார். திருமாலையாண்டான் அதை ஏற்றுக்கொள்ளமால் அவருக்கு அர்த்தம் சொல்வதை நிறுத்திவிட்டார். இதை கேள்வியுற்ற திருக்கோட்டியூர்நம்பி திருவரங்கம் வந்து திருமாலையாண்டானை சந்தித்து எம்பெருமானார் சொல்லும் அர்த்தம் சரிதான் என்றும் அவ்விதமே ஆளவந்தாரும் அர்த்தம் சொல்லி வந்ததை தாம் கேட்டிருப்பதாகவும், ஆளவந்தாருக்கு தோன்றாத அர்த்தங்கள் எம்பெருமானாருக்கும் தோன்றாது என்று தெரிவித்தார். மேலும் எம்பெருமானார் ஆசார்யனிடம் அர்த்தம் கேட்பது கிருஷ்ணர் சாந்தீபனிடம் வேதாத்யயனம் பண்ணினது போன்றது என்று சொல்லி திருமாலையாண்டானை திருவாய்மொழியின் அர்த்த காலசேஷபத்தை மீண்டும் தொடங்கக் கேட்டுக் கொண்டார். அதன்படி அர்த்த காலசேஷபம் தொடர்ந்து முடிந்தது.

## கிடாம்பியாச்சானை எம்பெருமானாரிடம் தளிகை கைங்கர்யம் செய்ய நியமித்தல்

ஒரு சமயம் உடையவருக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உஞ்சவிருத்தி பிஷை சமர்பிக்கும் பொழுது உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்து கொல்ல நினைத்தார். பகவத் கிருபயால் உயிர் தப்பினார். இதைக்கேட்டு திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். காவிரி ஆற்று மணலில் அவரை உடையவர் எதிர் கொண்டு அழைத்தார். கொதிக்கும் ஆற்று மணலில் நம்பியை ஸாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். நம்பி அவரை எழுந்திருக்கச் சொல்லவில்லை. அருகிலிருந்த கிடாம்பி ஆச்சான் இதைக்கண்டு பொறுக்காமல் `இது என்ன சிஷ்ய ஆசார்யக்ரமம்? விஷம் வைத்தவர் செயலை விட இது மிகக் கொடுமை' என்று நம்பியிடம் சொல்லி, உடையவருடைய திருமேனியை வாரி அணைத்துக் கொண்டார். இதை எதிர்பார்த்த நம்பி இவருடைய பரிவைக்கண்டு மெச்சி, இவரை உடையவருக்கு தளிகைக் கைங்கர்யம் செய்யும்படி நியமித்தார்.

**திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளே சரணம்.**

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**